# 3. நீரின்றி நாமில்லை



## சிந்தும் மழைநீர்

மழைபெய்யும் போதிலே
மண்ணில் வீணாய் ஓடிடும்
மழைநீரைச் சேர்க்கவே
மனையில் இடம் ஒதுக்குவோம்!

காடுகழனி போலவே
காசு பணம் போலவே
தேடும் பொருளைப் போலவே
தேக்க வேண்டும் நீரையே!

வானமழை பெய்கையில்
வடியும் நீரை வீட்டிலே
ஆனமட்டும் சேர்த்திட்டால்
ஆண்டு பல வாழலாம்!

சேர்த்தபணம் சமயத்தில்
உதவுவதைப் போலவே
சேகரிப்போம் வாருங்கள்
சிந்தும் மழை நீரையே!

**– க. இராமச்சந்திரன்.**

### மெட்டு அமைப்போம்

- பாடலைப் பல்வேறு மெட்டுகளில் பாடுங்கள்.

### குறிப்பு எழுதுவோம்

- பாடலின் கருத்துணர்ந்து மழைநீர் சேகரிப்புக் குறித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.

### உரைநடை எழுதுவோம்

- பாடலை உரைநடை வடிவில் மாற்றி எழுதுங்கள்.

# உயிர்த்துளி

மாலா : கோபி! கோபி! எங்கேடா இருக்கே?

கோபி : அடடே...! மாலாவும், கீதாவுமா? வாங்க...! வாங்க...! இப்பதான் எங்க வீட்டுக்கு வழி தெரிஞ்சுதாக்கும்!

மாலா : டேய் கோபி! கோவிச்சுக்காதடா...! வீட்டில் வேலை அதிகம். அதனால்தான் வரமுடியல.

கீதா : ஆமாம்... உன் விடுமுறை நாட்களெல்லாம் எப்படிப் போகின்றன?

கோபி : அதுதான் நீங்களே... பார்க்கிறீங்களே! செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலேயே என்னோட நேரம் போயிடுது.

கீதா : ஏன்டா கோபி! செடிகளுக்குக் கிணற்று நீரையா பாய்ச்சுற?



மாலா : செடிகளுக்குப் பாய்ச்சுற அளவுக்குக் கிணற்றில் தண்ணீர் இருக்கா...?

கோபி : கிணற்றுல தண்ணீர் எங்கே இருக்கு? கிணறுதான் வற்றிப் போயிற்றே. குழாய்த் தண்ணீரைத்தான் பயன்படுத்துறேன்.

மாலா : ஏன்கோபி! தண்ணீருக்காக மக்கள் அலைவது தெரியலையா? குடிநீரைத் தோட்டத்திற்குப் பாய்ச்சுறியே! இது உனக்கே நல்லாஇருக்கா?

கோபி : நான்... எங்க வீட்டுக் குழாய் நீரைத்தானே பாய்ச்சுறேன்?

மாலா : கோவிச்சுக்காதடா...! நீ செய்யறது தப்புதான்டா. இன்றைக்கு மழை இல்லாம நீர் நிலைகள் எல்லாம் வற்றிப்போயிடுச்சு. நிலத்திலிருந்து கிடைக்கும் நீரும் கொஞ்சம் கொஞ்சமா குறைந்து கொண்டே வருகிறது.

கோபி : மாலா! நீ சொல்வதும் சரிதான். செடிகளுக்குத் தண்ணீர் விடலேன்னா பட்டுப்போகுமே! அதை என்னால் தாங்க முடியாதே.

கீதா : செடிகளிடம் நீ காட்டும் இரக்கத்தைக் கண்டு நான் பெருமைப் படுகிறேன். ஆனால் குடிக்கத் தண்ணீர் கிடைக்காத இந்த நேரத்திலே... குழாய்நீரை வீணாக்கலாமா?

கோபி : நீ சொல்வது சரிதான் கீதா!

மாலா : கோபி... இன்று நீரில்லாமல் வயல்களெல்லாம் காய்ந்து கிடக்கின்றன. புல்பூண்டு கூட முளைக்கவில்லை. ஆடு மாடுகள் மேய்ச்சல் இல்லாமலும், குடிக்கத் தண்ணீரில்லாமலும் செத்து மடிகின்றன.

கோபி : நான் கொஞ்சம் தண்ணீரைத் தோட்டத்திற்கு விட்டதற்கே... இப்படிச் சொல்கிறீர்களே! ஒவ்வொருவரும் எவ்வளவு தண்ணீரை வீணடிக்கிறாங்க?

கீதா : நீ மற்றவர்களைக் குறைகூறாதே. நம் ஊர் இருக்கிற நிலைமையில், நீ தோட்டத்திற்கு விடுகிற நீர் பல குடும்பங்களுக்குப் போதுமானது.

கோபி : நீங்க ரெண்டுபேரும் என்னை மன்னிச்சிடுங்க. நான் செய்த தவறை உணர்ந்து கொண்டேன். இனி, நான் தண்ணீரை வீணாக்க மாட்டேன். மற்றவர்களையும் வீணடிக்க விடமாட்டேன். எங்க வீட்டிலுள்ள கழிவுநீரைப் பயன்படுத்திச் செடிகளையும் பாதுகாப்பேன்.

மாலா : சரியான முடிவுடா கோபி!

கோபி : நான் செய்த தவறுக்கு ஆறுதலா ஏதாவது செய்யணும்.





கீதா : தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதைப் பற்றி அனைவருக்கும் கூறப் போகிறேன். நானும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.

கோபி : இனிமேல்... நான் தேவைக்குப் போக மீதியுள்ள நீரைப்பக்கத்திலுள்ளவர்களுக்குக் கொடுப்பேன்.

மாலா : டேய் கோபி! நாம் செய்கிற இந்த உதவிகள் எல்லாம் தற்காலிகமானதுதான். தண்ணீர்ப் பஞ்சம் வராமலிருக்க நாம் வேறு ஏதாவது முயற்சி செய்ய வேண்டும்.

கோபி : ஆமா... நம்ம ஊரில் தாராளமாக மழை பெய்தும், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது. அதைப்பற்றி நாம் யோசிக்கத்தான் வேண்டும்.

மாலா : அதற்கு நிரந்தரமான தீர்வு என்ன தெரியுமா?

கீதா : சொல்லு மாலா...! சீக்கிரம்!

மாலா: வீணாகிற மழைநீரையெல்லாம் நிலத்திற்கு அடியில் சேமிக்க வேண்டும். வீடுகள் தோறும் மழைநீர்த் தொட்டிகள் அமைக்க வேண்டும். அப்போதுதான் தண்ணீர்ப் பஞ்சம் என்ற கொடிய அரக்கனை அழிக்க முடியும்.

## நாடகமாக நடிப்போம்

உரையாடல் பகுதியை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

## சுவரொட்டி தயாரிப்போம்

- மழைநீரைச் சேகரிப்பதன் தேவையை உணர்த்தும் சுவரொட்டிகள் தயாரியுங்கள்.

## விண்ணப்பம் எழுதுவோம்

- பாடசாலையில் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கக்கோரி ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் தயாரிப்போமா?

வண்டிப்பெரியார்,
21-6-2009.

அனுப்புநர்

..............................................................

..............................................................

பெறுநர்

..............................................................

..............................................................

ஐயா,

..............................................................................................................................................

..............................................................................................................................................

தங்கள் உண்மையுள்ள,

......................................................

## குறிப்பு எழுதலாம்



- படத்தை உற்றுப்பார்த்துக் குறிப்பு எழுதுங்கள்.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

## வாக்கியங்களை இணைப்போம்

- **மாதிரியில் தரப்பட்டுள்ளது போன்று பின்வரும் வாக்கியங்களை ஒரே வாக்கியமாக மாற்றி அமைக்கவும்.**

மாதிரி

மழை பெய்தது. பயிர்கள் செழித்து வளர்ந்தன.
மழை பெய்ததால் பயிர்கள் செழித்து வளர்ந்தன.

- வானம் இருண்டது. மழை பெய்தது.

..............................................................

- மழை பொய்த்தது. மக்கள் துன்பம் அடைந்தனர்.

..............................................................

- தண்ணீர் வீணானது. தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது.

..............................................................